

கொக்குவில் தலையாழியைப் பிறப்பிடமாகவும்
மன்னார் சின்னக்கடையை வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர். இரத்தினம் நவரத்தினம் அவர்களின்
சிவபதப்பேறு குறித்து வெளியிடப்படும்

# நினைவு மலர்

13.05.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பிள்ளையார் துணை



கொக்குவில் தலையாழியைப் பிறப்பிடமாகவும்

மன்னார் சின்னக்கடையை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர். இரத்தினம் நவரத்தினம் அவர்களின்

சிவபதப்பேறு குறித்து வெளியிடப்படும்

# நினைவு மலர்

13.05.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# சமர்ப்பணம்

அன்பாலும்

பண்பாலும் பாசத்தாலும்

எம்மை வழிநடத்தி

அறிவு தந்து நலமுடன்

வாழ வைத்திருக்கும் எம் ஆருயிர்த்

தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தி

யடைய இம்மலரை தங்களின்


பொன்னான பாதார விந்தங்களுக்கு

சமர்ப்பிக்கிறோம்.

ஆறாத்துயரால் தவிக்கும்
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிறப்பு
16.05.1919

இறப்பு
29.03.2011


# அமரர்.
# இரத்தினம் நவரத்தினம்

**திதி வெண்பா**

விகிர்தி வருடம் பங்குனித்திங்கள் தன்னில்
நிகழ் கிருஸ்ண பட்ச தசமி திதியில் - புகழுடைய
நவரத்தினம் எனும் நாமமுடைய நல்லான்
ஏகினான் ஏகநாயகன் பொற் பாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிறப்பு
06.06.1925

இறப்பு
02.12.2003

# அமரர்.
# தனபாக்கியவதி நவரத்தினம்
## (ஓய்வுபெற்ற ஆசிரியை)

**திதி வெண்பா**

பண்புநிறை தனபாக்கியவதி எனும் பத்தினி
சுபம்மிகு சுபானு கார்த்திகை சுக்கிலபட்ச நவமியில்
கோலம்மிகு வாழ்வகன்று கூத்தபிரான் திருவடிக்கே
ஆவலுடன் சென்றார் நற்சீர் பெறவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

### திருச்சிற்றம் பலம்

## தேவாரம்

சங்க நிநி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் மல்லோம்
மா தேவர்க் கேகாந்தர் அல்லா ராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.

## திருவாசகம்

விண்ணாளும் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானை
தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டானை(ப்)
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல் காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணாமலை யானைப் பாடுதுங்காண் அம்மானாய்

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ? அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார், அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான் முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நிழல் பொருவில் அன் புருவர் ஆனார்,

## திருப்புகழ்

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேன் அமுதத்து உணர்வூறி
இன்பரசத்தே பருகிப் பலகாலும்
என்றன் உயிர்க்கு ஆதரவற் றருள்வாயே
தம்பி தனக்காக வனத்து அணைவோனே
தந்தைவலத் தால் அருள்கைக் கணியோனே
அன்பர் தமக் கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத்து ஆனைமுகப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேவி துணை

# கோர கௌரி நாயகி விரதப்பாடல்

*முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு*
*என்னின் றருள்செய் எலிவா கனகப்பிள்ளாய்*
*சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்*
*எக்குற்றம் வாராமற்கா.*

## வேண்டுதற் கூற்று

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளி மகாதேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்து வாழ்ந்துடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே என்னைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப்புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவோம்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்.
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகக்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

**திருச்சிற்றம் பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலம் சென்ற அமரர். இரத்தினம் நவரத்தினம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்துமாகடலின் அலையின் அரவணைப்பில் முத்தாய் மிளிரும் ஈழத்திருநாட்டின் சிரசாய் விளங்கும் வடபால் யாழ்ப்பாணத்தில் கொக்குவில் - தலையாழி எனும் பதியில் பொன்னர் இரத்தினம்- சின்னம்மா தம்பதியரின் இல்லறத்தின் தவப்பயனால் 16.05.1919 அன்று உதித்தவரே அமரர் இரத்தினம் நவரத்தினம் ஆவார்.

தனது 5வது அகவையில் தந்தையாரை இழந்து தாயாரின் அரவணைப்பில் வளர்ந்த அன்னார் தனது ஆரம்பக்கல்வியை கொக்குவில் இந்துக்கல்லூரியிலும், இடைநிலைக்கல்வியை யாழ் இந்துக்கல்லூரியிலும் கற்று லண்டன் மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் சித்தி அடைந்தார். எழுது வினைஞராகக் கடமையாற்றிய பின்னர் பதவி உயர்வு பெற்று புகையிரத நிலைய அதிபரானார். அன்னார் தெமட்டகொடை, கொள்ளுப்பிட்டி, கணேவத்தை, தம்புத்தேகம, நாகொல்லகம, மன்னார், கந்தளாய் ஆகிய புகையிரத நிலையங்களில் சிறப்பாகப் பணியாற்றினார். 1948ம் ஆண்டு கொக்குவில் கிழக்கு – பிரம்படியைச் சேர்ந்த இரத்தினசபாபதி – மாரிமுத்து தம்பதியரின் மூத்த புத்திரியாகிய ஆசிரியை தனபாக்கியவதியை திருமணம் செய்து கொண்டார். இல்லறத்தின் நற்பயனாக இரத்தினமலர், இரஞ்சிதமலர், வசந்தமலர் ஆகிய மூன்று பெண்குழந்தைகளைப் பெற்று இனிதே வாழ்ந்து வந்தனர்.

தனது பிள்ளைகள் மூவரும் பெண்பிள்ளைகளாக இருப்பினும் தமது சொந்தக்காலில் நிற்க வேண்டும் என்ற எண்ணத்துடன் கல்வி கற்பதற்குத் தேவையான ஊக்கத்தை அளித்ததோடு வசதிகளையும் செய்து கொடுத்தார். தனது மூத்த மகள் இரத்தினமலரை சுருக்கெழுத்து- தட்டெழுத்தாளராகவும், முன்பள்ளி ஆசிரியராகவும் பயிற்றுவித்தார். இரண்டாவது புத்திரி இரஞ்சிதமலரை புவியியல் சிறப்புப் பட்டதாரியாகவும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகவியலில் பட்டப்பின் டிப்ளோதாரியாகவும் (Post Graduate Diploma in Library Science). இளைய மகள் வசந்தமலரை கலைப்பட்டதாரியாகவும், கல்வியியலில் பட்டப்பின் டிப்ளோமாதாரியாவும் (Post Graduate Diploma in Education) ஆக்கிய பெருமை அன்னாரையே சாரும்.

பிள்ளைகள் திருமணவயதை அடைந்தவுடன் அவர்களுக்கேற்ற மணமக்களைத் தெரிவுசெய்து, மூத்த மகளுக்கு பொறியியலாளர் இராமகிருஸ்ணனை மணம் முடித்து வைத்தார். இரண்டாவது மகளுக்கு கணக்காளர் ரஞ்சித்தை திருமணம் செய்து வைத்தார். அதன்பயனாக அவர்கள் பிரணவன், சாயிரஞ்சினி ஆகியோரைப் பெற்று மகிழ்ந்தனர். இளைய மகளுக்கு இலங்கை மின்சாரசபையைச் சேர்ந்த பிரதமலிகிதர் சுந்தரலிங்கம் என்பவரை மணம் முடித்து வைத்து ருக்ஷா எனும் பேத்தியைக் கண்டு மகிழ்ந்தார். தனது பேரப்பிள்ளைகளும் நன்றாகக் கல்வி கற்க வேண்டும் என்ற விருப்பத்துடன் அவர்களையும் ஊக்குவித்து வந்த அவர் அவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான போதும், பேத்தி ருக்ஷா CIMA (Charted Institute of Management Accountants) பரீட்சையில் சித்தி அடைந்த போதும் பெரிதும் மகிழ்வுற்றார். இவ்வாறு ஒரு தந்தைக்குரிய, ஒரு குடும்பத்தலைவனுக்குரிய பணிகளை ஒரு குறைவுமின்றி நிறைவு செய்த அன்னார்தான் ஓய்வு பெற்றதும், தனது இல்லத்தில் கால்நடைகளை, வளர்ப்பதிலும், பழமரங்களை நாட்டுவதிலும் தனது ஓய்வு நேரத்தைக் கழித்தார். அமைதியாகச் சென்று கொண்டிருந்த அவருடைய வாழ்வில் உள்நாட்டுயுத்தம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் காரணியாயிற்று. 1996ம் ஆண்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தனது மனைவியுடன் மூத்த மகளின் இருப்பிடமான மன்னாருக்குச் சென்று, அங்கு தனது எஞ்சிய காலத்தைக் கழித்தார்.

மன்னார் வாசியாகி, அங்குள்ள அயலவர்கள், நண்பர் களுடன் அந்நியோன்னியமான ஒரு வாழ்க்கையை வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த அவருடைய வாழ்க்கையில் 2003ம் ஆண்டு மார்கழி மாதம் ஏற்பட்ட மனைவியின் இழப்பு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. எனினும் தனது சோகத்தை வெளிக்காட்டாது இயல்பான வாழ்க்கைக்கு மீண்டும் திரும்பினார். இந்நிலையில் வயோதிபத்துக்குரிய மாற்றங்கள் அவரை சிறிது சிறிதாகத் தாக்கத்தொடங்கியது. கடந்த மூன்று மாதாங்களாக எழுந்து நடமாட முடியாத நிலைக்கு ஆளான அவர் 29.03.2011 செவ்வாய் அதிகாலை இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லோரும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

*கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும்*
*குடிகொண்டிருக்கிறார்*
*இதைத் தவிரத் தனியாக வேறு ஒரு கடவுள்*
*இல்லை இந்த உண்மையை*
*எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு நான்*
*புரிந்து கொண்டிருக்கிறேன்.*
*மக்களுக்குச் சேவை செய்பவன்*
*உண்மையில் கடவுளுக்குச் சேவை*
*செய்பவனாகிறான்*

**- சுவாமி விவேகானந்தர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகள்

அன்புக்கோர் இலக்கணமாகி
பாசமுடன் எமை வளர்த்து
பரிவுடன் அரவணைத்து
சொந்தக்காலில் நிற்க வேண்டுமென
ஊக்கமுடன் கல்விகற்பித்து
எம் வாழ்வுக்கு ஒளியூட்டிய அப்பா!
சொல்லாமல் எம்மைவிட்டுப்போனதேனோ?
உங்கள் நகைச்சுவைக்கதைகள் - இனி
எப்போது கேட்பது – உங்களிடம்
கதை கேட்கக் காத்திருக்கும் பேரப்பிள்ளைகளுக்கு
கதை கூற இனி யாருள்ளார்?
வெண்ணிற உடையுடன்
கறுத்தத் தொப்பி அணிந்து
கம்பீரமாகக் கடமை புரிந்த
உங்கள் உருவம்-
கண்களைவிட்டு அகல மறுக்கிறதே – அப்பா
நான் மன்னாருக்கு வந்து திரும்பும் போது
உங்கள் இயலாமையையும் பொருட்படுத்தாது
வாசல் வரை வந்து வழி அனுப்புவீர்களே- அப்பா
உங்களை எப்போது மீண்டும் காண்பது?
பாசமுடன் உங்களுக்கு பணிவிடை செய்த
மலர் அக்காவை பரிதவிக்க விட்டு மறைந்ததேனோ?
ரஞ்சி அக்கா மீண்டும் எங்களைப் பார்க்க
வரமுன்னரே, எம்மைப்பிரிந்து சென்றுவிட்டீர்களே!
நோயுடன் போராடியது போதும், இனியும்
பிள்ளைகளைக் கஷ்டப்படுத்தக் கூடாது
என்று நினைத்து மீளாத்துயிலில் ஆழ்ந்து விட்டீர்களோ
உங்கள் நினைவலைகளைச் சுமந்து கொண்டு
எங்கும் தேடுகிறேன் அப்பா!
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கும்

**இளைய மகள்**

**வசந்தா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் நினைவுகளில்
# எங்கள் அப்பா அம்மா

யாழ்ப்பாணம்- தலையாழியில் சைவக் குடும்பத்தைச் சேர்ந்த பொன்னர் இரத்தினம்- சின்னம்மா தம்பதியருக்கு கடைசிப்பிள்ளையாக 1919ம் ஆண்டு வைகாசி 16ம் திகதி கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர் எங்கள் அப்பா. அவருக்கு செல்லம்மா, நாகராஜா என்ற மூத்த சகோதரர்கள் வாய்த்திருந்தனர். எமது பாட்டனார் தான் சொந்த வியாபாரம் செய்தாலும் தனது பிள்ளைகள் அரசாங்க உத்தியோகம் பெற வேண்டுமென்ற விருப்பத்துடன் அவர்கள் கல்வியில் மிகவும் சிரத்தை எடுத்துக் கொண்டார். குடும்பத்தின் கஷ்டங்களை அப்பா சிறுவயது முதலே உணர்ந்திருந்ததால், தந்தையின் மறைவிற்குப் பின்னர், அவரது இலட்சியத்தை நிறைவேற்றும் வழியில், ஆரம்பக்கல்வியை கொக்குவில் இந்துக்கல்லூரியிலும், இடைநிலைக்கல்வியை யாழ் இந்துக்கல்லூரியிலும் கற்று, இலண்டன் மெற்றிக்குலேசன் பரீட்சையில் சித்தியடைந்தார். மேற்கொண்டு படிப்பைத் தொடர வசதியில்லாததால் அரசாங்க எழுதுவினைஞராக தமது உத்தியோக வாழ்வை ஆரம்பித்தார். இவ்வேளையில் துரதிஷ்டவசமாக சகோதரனையும் இழக்க வேண்டி நேரிட்டது.

'கெட்டகுடிக்கு ஒரு கேட்டை' என்ற பழமொழிக்கிணங்க தன் குடும்பத்தின் ஒரே நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய அப்பா, இளம்வயது முதலே உடலுக்கும் மனதிற்கும் வலிமைதரும் யோகாசனத்தின் தேர்ச்சிபெற்றிருந்ததுடன், முன்னேற்றமான சமூக சிந்தனை உடையவராக விளங்கினார். தாயாருக்கும் சகோதரி குடும்பத்தினருக்கும் ஆதரவும் ஆறுதலும் அளிப்பவராக இருந்ததுடன், படிப்படியாக முன்னேறி, பதவி உயர்வு பெற்று புகையிரத நிலைய அதிபரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் அம்மாவின் தந்தையார் ச. இரத்தினசபாபதியும் தாயார் மாரிமுத்துவும் மலேசியாவில் இருந்து 2ம் உலகமகாயுத்த காலத்தில் இலங்கை திரும்பியவர்கள். கொக்குவில், பிரம்படியைச் சேர்ந்த எமது பாட்டனார் மலேசியாவில் புரிந்த அப்போதிக்கரி உத்தியோகத்தை உதறிவிட்டு பிள்ளைகள் ஐவருடன் தனது சொந்த இடமான கொக்குவிலுக்குத் திரும்பியிருந்த வேளை மூத்த மகளான அம்மா 1925ம் ஆண்டு ஆனி மாதம் 6ம் திகதி மலேசியா-பெற்றாலங்கஞ்சியா கம்பாரில் பிறந்தவர். தாயகம் திரும்பி, உடுவில் மகளிர் கல்லூரியில் பயின்று, ஆங்கில ஆசிரியரானார். இவர்களின் தூரத்து உறவினராக அப்பாவின் நற்குணங்களால் கவரப்பட்டு தமது மூத்த மகளை 1948ம் ஆண்டு புரட்டாதி மாதம் 9ம் திகதி திருமணம் செய்வித்து மருமகனாக்கிக் கொண்டனர்.

நாம் மூவரும் பிறக்கும் வரை கொக்குவிலில் இருந்தாலும், நாளடைவில் பணி கருதி அப்பா இலங்கையில் பல பகுதிகளுக்கும் குடும்பத்துடன் செல்ல வேண்டியிருந்தது. ஆரம்பத்தில் அந்த இடங்களில் தனது ஆசிரியைப்பணியைத் தொடர அம்மாவால் முடிந்தாலும், நாங்கள் வளர்ந்துவர தொடர்ந்து உத்தியோகம் பார்க்க முடியவில்லை. மேலும் , பணிப் பெண்கள் தனது மகள்மாரை சரிவரக் கவனிக்கவில்லை என்ற அப்பாவின் அபிப்பிராயத்தால் , அம்மா தனது பணியை உதறிவிட்டு , முழுநேர குடும்பத்தலைவியானார். எங்கள் கல்வி கொக்குவில் இந்துக்கல்லூரியில் ஆரம்பித்து, நாட்டின் பல நகரங்களிலும் தொடர்ந்தது. கடவத்தை, கணேவத்தை, தெமட்டகொடை, தம்புத்தேகம, கொள்ளுப்பிட்டி எனப்பல இடங்களிலும் புகையிரத நிலைய அதிபராக அப்பா கடமையாற்றியுள்ளார். நாம் உயர் வகுப்புகளை அடைந்தபோது, அப்பாவைப் பிரிந்து அம்மாவுடன் யாழ்ப்பாணத்தில் ஆச்சி, அப்புவுடன் போய் வாழ நேர்ந்தது. அக்காலங்களில் இடையிடையே அப்பாவரும் நாட்களை ஆவலுடன் எதிர்பார்ப்போம். தான் தொழில் புரியும் இடங்களின் பிரசித்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்கறிகள், பழவகைகள், வீட்டுத்தோட்டத்தில் விளைந்தவை என தவறாமல் கொண்டுவரும் அப்பா ஊரில் தனக்குப்பிடித்தமான உணவுவகைகளை வாங்கிவந்து சமைக்கச் சொல்லி இரசித்து உண்பார். அப்பா திரும்பிப் போகும் நாள் எங்களைப் பொறுத்தவரை மிகவும் சோகமான நாளாகும். பாடசாலை விடுமுறை நாட்களை ஆவலுடன் காத்திருந்து, அப்பா தொழில் புரியும் இடங்களில் கழிப்போம். பல சிங்கள, முஸ்லீம் நண்பர்களையும் அப்பா சம்பாதித்து வைத்திருந்தார். அவர்களின் குடும்பத்தாருடன் சுற்றுலா செல்வதுடன், உணவுவகைகளையும் பரிமாறிக்கொள்வோம்.

தனக்கு மூவரும் பெண்பிள்ளைகள் என்றெண்ணி அப்பா ஒருபோதும் சோர்ந்து விடவில்லை. மாறாக எங்களுக்கு போதிய கல்வியை அளித்து சொந்த காலில் நிற்கும் துணிவையும் தன்நம்பிக்கையையும் அளிப்பதே தனது முக்கிய கடமை என்று கருதினார். அதனை நிறை வேற்றுவதற்காக குடும்பத்தை பிரிந்திருந்து, இரவில் நித்திரை விழித்து பணிசெய்து, தன்னாலியன்ற மட்டும் தேவைகளைக் குறைத்து, எளிமையில் செம்மையாக வாழ்ந்தார். அம்மாவின் சகோதர, சகோதரிகள் நல்வாழ்விலும் அக்கறை காட்டி உறுதுணையாக இருந்தார். தனியாக வசித்த காரணத்தால் உடல் நலத்தைக் கவனிக்காது விட்டதாலோ என்னவோ தனது 47வது வயதில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டார். கையில் வந்த ஒரு காயத்தை, வழக்கம்போல் மாறிவிடும் என்று நினைத்து, விடுமுறையில் எங்களைப் பார்க்கவந்த பொழுது அம்மாவின் வற்புறுத்தலினால், வைத்தியரிடம் சென்ற சமயம், அது நீரழிவு நோயின் அறிகுறி என்ற உண்மை தெரிய வந்தது. அப்பா இடிந்துபோய் அமர்ந்திருந்ததை அன்றுதான் முதல் தடவையாகக்கண்டோம். ஆனாலும் தன்னளவில் தேறி அம்மாவையும் எங்களையும் உற்சாகப்படுத்தும் விதமாக, நோய் பற்றிய விளைவுகளை ஆராய்ந்தறிந்து அதனை இலகுவாக ஏற்றுக்கொண்டார். எந்த ஒரு புறக்காரணியாலும் தனது இலட்சியங்கள் தடைப்பட்டுவிடக்கூடாது. என்பதில் அப்பா மிகவும் உறுதியாக இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது 55வது வயதில் கானா (Ghana) நாட்டில் புகையிரத சேவையில் அதிபராக வேலைவாய்ப்பு தேடிவந்தபோது, நோயையும் பொருட்படுத்தாது புறப்படத் தயாராகியவரை, அம்மா அனுமதிக்கவில்லை. அதனைத் தொடர்ந்து மேலும் இருவருடங்கள் மன்னார் புகையிரத நிலைய அதிபராகக் கடமையாற்றி, சேவையிலிருந்து ஓய்வுபெற்றார். அதன் பின்னர் தான் முழுநேர உழைப்பாளியாக மாறினார். வீட்டைத்திருத்தி, மரங்களை நட்டு கால்நடைகளை வளர்த்து எங்களுக்கான வசதிகளைப் பெருக்கினார். புதிய வீடொன்றை கட்டி, அதற்கு 'கஸ்தூரி' என்று பெயரிட்டார். நாங்கள் கல்வியை முடிக்கும் காலகட்டத்தில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக ஆசிரியப்பணியை தொடர அம்மாவுக்கு கிடைத்த வாய்ப்பை மறுக்காமல் அனுமதித்தார். அதன் விளைவாக கூடுதலாக வீட்டுப்பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார். தவிரவும், பிரம்படி சனசமூக நிலையத்தலைவராகவும், கூட்டப்படாத பஞ்சாயத்தின் 'நியமிக்கப்படாத" தலைவராகவும், சமூக ஆலோசகராகவும், எல்லோருக்கும் பிடித்த 'ஐயா"வாக விளங்கினார். குடும்பத்தில் நடைபெறும் எல்லா நன்மை தீமைகளிலும் முக்கிய பங்கேற்று, முறைப்படி நிவேற்றினார். பணி நிமித்தம் நாங்கள் பஸ், புகைவண்டியில் பிரயாணம் செய்ய நேரும் பொழுதெல்லாம், எங்களைத் தன் துவிச்சக்கரவண்டியில் ஏற்றிச் சென்று பஸ், புகைவண்டி நிலையத்தில் விடுவார். எங்களுக்கு உடல் நலமில்லை என்றால் துவிச்சக்கர வண்டிச்சவாரி நிச்சயம்.

அப்பாவின் உற்றதுணையாக, நிழலாக வாழ்ந்த அம்மா "தாய்மை" என்ற சொல்லுக்கு விளக்கமாக வாழ்ந்தவர். ஐவருள் மூத்தவராகப் பிறந்ததால் பொறுமை, சகிப்புத்தன்மை பாசம் என்பவற்றிற்கு உதாரணமாக விளங்கினார். அவர் பேச்சினால் சாதித்ததைவிட செய்கையால் சாதித்தது அதிகம். வீட்டிற்கு வரும் குடும்பத்தவர், நண்பரையெல்லாம் அன்புடன் வரவேற்று உபசரிப்பார். அப்பாவின் சிங்கள நண்பர் பலருக்கும் அம்மாவின் சமையலென்றால் மிகவும் பிடிக்கும். தான் பத்து வருடங்களாக ஆர்வத்துடன் செய்து வந்த ஆசிரியத் தொழிலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் நலன்கருதி உதறிவிட்டு, அப்பா வெளியிடங்களில் தொழில் புரிந்த காலத்தில் முழுப்பொறுப்புகளையும் ஏற்று நடத்தினார். தனது வயதான பெற்றோரையும் கவனித்துக்கொண்டார்.

நாட்டில் குழப்ப நிலைமைகள் தோன்றிய கால கட்டங்களில் கணவர், மற்றும் சகோதர சகோதரியர் பற்றி கவலைப்படுவதில் அம்மாவுக்கு நிகர் யாருமில்லை. நாங்கள் வெளிமாவட்டங்களில் பணிசெய்வதில் அம்மாவுக்கு துளியும் விருப்பமில்லை. நாட்டில் இனப்பிரச்சனைகள் தலையெடுத்த போது அவரது நிம்மதி காணாமல் போனது. இதற்காக வானொலி, பத்திரிகை, வாய்மொழிச் செய்திகளை அவரது காதில் விழாதவாறு தடுக்க அப்பாவும் நாங்களும் பல முயற்சிகள் எடுப்பதுண்டு. அனைவரும் நலம் என்ற செய்தி காதுக்கெட்டும்வரை அவரது அங்கலாய்ப்பு ஓய்வதில்லை.

ஏறக்குறைய 20 வருடங்களின் பின்னர், தனது 47வது வயதில் மீண்டும் ஆசிரியப்பணியில் ஈடுபடநேர்ந்தபோது அவரது ஆர்வமும், உற்சாகமும் சிறிதும் குறைந்திருக்கவில்லை. ஒரு வருடம் குறுகிய பயிற்சியை பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் முடித்தவர், இரு பஸ் வண்டிகளில் பிரயாணம் செய்து காரைநகர் பாடசாலைக்கு தினமும் சென்று வந்தார். அதிகாலை எழுந்து எமக்காக காலை, மதிய உணவுகள் தயாரிப்பார், பாடசாலை முடிந்து வந்து இரவு உணவு தயாரித்தபின்னர், பாடசாலை வேலைகளை கவனித்தார். அரசு பாடப்புத்தகங்களில் இடம்பெறும் Butter, Jam போன்ற சொற்களை, அவை பற்றி கண்டோ, கேட்டோ அறியாத காரைநகர் சிறார்களுக்கு எவ்வாறு விளங்கவைப்பது என்பது அவருக்கு பெரிய கவலையாக இருக்கும் சில சமயங்களில் வீட்டிலிருந்து அவற்றை பாடசாலைக்கு எடுத்துச் சென்று விளங்கப்படுத்துவார். எங்கள் திருமணங்களை குறைவின்றி நடத்தி மகிழ்ந்த அப்பாவும் அம்மாவும் பேரன் பேத்தியை பொறுப்புடன் பேணி வளர்த்தனர். குறிப்பாக பிரணவனின் தாய் மேற்படிப்பிற்காக லண்டனுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை கொழும்பில் கடமையாற்றியதாலும் பேரனை வளர்க்கும் பொறுப்பை ஏற்று திறம்பட வளர்த்தனர். நாட்டு நிலைமைகள் பிரச்சனைக்குரியதாக இருந்தகால கட்டங்களில் அப்பாவும் அம்மாவும் தாமே பேரப்பிள்ளைகளுக்கு பொறுப்பு என்றுணர்ந்து, கஷ்டம் தெரியவிடாது பாதுகாப்புடன் வளர்த்தனர். 1987ல் பிரணவனின் அம்மா நாடுதிரும்பிய பின்னரும் அம்மம்மாவே அவருக்கு எல்லாமாக இருந்தார். பிறப்பு முதற்கொண்டு மூன்று வயது வரை பிரணவனை வளர்ப்பதில் அவர்கள் இருவரும் எடுத்துக்கொண்ட சிரமங்கள் ஈடுசெய்யமுடியாதவை.

இதற்காகவே அம்மா ஆசிரியத்தொழிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார். நாட்டுப் பிரச்சனைகளை முன்னிட்டு 1990ம் ஆண்டு பிரணவன் தன் பெற்றோருடன் வெளிநாடு செல்ல வேண்டி வந்தபோது அப்பாவும், குறிப்பாக அம்மாவும் அடைந்த பிரிவுத் துயரம் அளவில்லாதது. 2003ம் ஆண்டு அம்மம்மாவின் 31ம் நாள் கிரியைகளுக்காக வந்த பத்தொன்பது வயதுப்பிரணவனைக் காணும் வாய்ப்பு அப்பாவுக்கு மட்டுமே கிடைத்தது. மூன்று வயது வரை தான் வளர்த்த பேரனை காணாமலே போய்விட்ட ஏக்கம் அம்மாவுக்கு கடைசிவரை இருந்தது என்றே தோன்றுகிறது.

1996 ம் ஆண்டு சொந்த வீட்டையும் ஊரையும் துறந்து, அத்தியாவசிய உடைமைகளை மட்டும் பத்திரப்படுத்திக் கொண்டு யாழ்குடா நாட்டைவிட்டு வெளியேறிய ஆயிரக்கணக்கான பேர்களில் எமது பெற்றோரும் அடங்குவர். முதிய வயதில் இத்தகைய இடம்பெயர்வு மனதிலும், உடலிலும் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கும் என்பதை உணர்வது கடினமல்ல. இருந்தபோதும் அப்பாதான் மிகவும் யதார்த்தமான மனிதராயிற்றே: மூத்தமகளினதும் மருமகனினதும் பாதுகாப்பில் மன்னாரில் சிறிய காலம் இருந்தபின்னர், ஊர் திரும்பலாம் என்று மனதைத் தேற்றிக் கொண்டார். அப்பா எடுக்கும் எல்லா முடிவுகளையும் மறு பேச்சின்றி ஏற்றுக் கொள்ளும் அம்மா, பிரச்சனைகளலால் பிள்ளைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளைகள், சகோதர, சகோதரிகள் பாதிக்கப்படாதிருக்க வேண்டி இறைவனைப் பிரார்த்தித்து தன் கடமைகளைத் தொடர்ந்தார். மன்னாரில் அயலவர்கள் நண்பர்களின் நன்மதிப்பைப் பெற்ற இருவரையும் அனைவரும் 'அப்பா' 'அம்மா' என்றே அழைத்தனர். வழக்கம்போல அப்பா தனது நாட்களை மரங்கள் நடுதல், வீட்டை பராமரித்தல், சிறுபிள்ளைகளுக்கு ஆங்கிலம் கற்பித்தல் என உற்சாகத்துடன் கழித்ததுடன், நாளடைவில் இந்த வாழ்க்கையையும் இருவரும் விரும்பி ஏற்றுக் கொண்டனர். விடுமுறைக்கு மன்னாருக்கு நாங்கள் வரும் போதெல்லாம், எங்களுக்கு பிடித்த உணவு வகைகளை வாங்கி வருவதில் சளைக்கவில்லை.

தன் தேவைகளை விடவும் அப்பாவின் தேவைகளுக்கு முதலிடம் கொடுத்த அம்மா 2003ம் ஆண்டில் இறைவனடி சேர்ந்த பின்னர் தனிமையை வெளிக்காட்டாது மகளின் பராமரிப்பில் வாழ்ந்த அப்பாவுக்கு மீண்டும் கொக்குவிலுக்குச் செல்லும் வாய்ப்பும் கிடைத்தது. அது தற்காலிகமானது என்று தெரிந்திருப்பினும், அவரடைந்த குதூகலத்திற்கு அளவில்லை. பழைய இடங்களுக்கு உற்சாகமாக நடந்து திரிந்து, நல்லூர் கந்தசுவாமி கோயிலை தரிசித்து தான் நட்டு வளர்த்த மரங்களை, பழைய நண்பர்கள், அயலவர்களுடன் அளவளாவி மகிழ்ந்தார். 2009ம் ஆண்டு தனக்கு 90 வயது பூர்த்தியாகி விட்டதை அவரால் மட்டுமன்றி மற்றவர்களாலும் நம்ப முடியவில்லை. நாற்பது வருடங்களுக்கும் மேலாக நீரழிவு நோய்க்கு சவால் விட்டு வாழ்ந்து வந்த அப்பா, தான் மற்றவர்களுக்கு பாரமாக படுக்கையில் வீழ்ந்து விடக்கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார். 91வது வயதினையும் கடந்து, 92வது வயதினை நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் அவரது உடல் சற்று தளர்வுறத் தொடங்கியது. அவருக்கான எல்லா வசதிகளும், தேவைகளும் உடனுக்குடன் கவனிக்கப்பட்டு வந்தாலும் அவரை மென்மேலும் துன்பப்படுத்த விரும்பாது அமைதியாகத்தனது திருவடிகளில் சேர்த்துக்கொண்டு நிரந்தரமான ஓய்வினை அளித்த இறைவனின் கருணை பெரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கை, சுய கௌரவம், Positiveness, நிதானம், ஒழுங்கு, பரிவு, பாசாங்கின்மை, வீணாக்காமை, நகைச்சுவை ஆகியன அப்பாவின் தனிப்பண்புகள் ஆகும். இளமையில் அவர் பயின்ற யோகாப்பியாசம், ஓயாத உடலுழைப்பு, கட்டுப்பாடான வாழ்க்கைமுறை என்பன அவரது நீண்ட நாள் ஆரோக்கியத்தின் இரகசியங்கள் எனலாம். தன் மனதிற்குப் பிடித்தவர்களை இழந்தபோது அவர்களது அந்திமக்கிரியைகளில் அப்பா மனம் உருகிப்பாடுகின்ற தேவார வரிகளுடன் இந்த நினைவுமாலையை எங்கள் பெற்றோரின் பாதங்களில் சமர்ப்பித்து, அவர்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

***சோடிழந்த அன்றிலைப்போல் துயரமானேனே***
***தோகை மயில் வாயில் அகப்பட்ட சர்ப்பமானேனே.***
***பாடுபட நானறியேன் பழனிவேலா***
***பச்சைமயில் ஏறிவந்து இரட்சிப்பாயே.***

**- என்றும் நினைவுகளுடன் மகன்மார் -**

***" The only proof of his existence is union with him the world disappears in him. He is the Peaceful, the good , the one without a second"***

**-From the Mandookya Upanished -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவின் நினைவுகளுடன்
# அருமை மகள்மாருக்கு...

அம்மாவின் சிறுவயதுக்காலம் எப்படி இருந்திருக்கும் என
எப்போதாவது வியந்திருப்பாய் நீ...

அவ்விடமே கேட்கலாமென்றால்....
நித்தமும் காலில் சக்கரம் பூட்டி ஓடும் நகரத்து வாழ்க்கை:
அதிகாலை எழுந்து, அறுசுவை சமைத்து,
அக்கறையாய் ஆறவைத்துக் கட்டி
மறந்திடாதே மகளேயென்று மறுதரமும் சொல்லி
செருப்பினுள் காலை, அல்லது காலினுள் செருப்பை
நுழைத்தபடி ஓடும் கடுகதி வாழ்க்கை.........
அவவை விட்டுவிடு பாவம்.
நாடுவேறானாலும் நானும் அதே வகைதான்:
கூடிப்பிறந்து குதித்து விளையாடி
பாதி கடித்துப் பகிர்ந்துண்ட பெரியம்மா – நான்
இப்போதே சொல்கின்றேன், இதயத்து உணர்வுகளை,
நீ மனக்கண்ணில் காண்பதற்கு, கவிதையாக்கி உண்பதற்கு,
பின் எப்போது வாய்த்திடுமோ இதுபோல் ஒரு தருணம்...

ஞாபகங்கள் தாலாட்டும் ....ஞாபகங்கள் பாலுட்டும்
கேட்டிருப்பாய் பாடலை உன் MP3யில்.....
அந்த நாட்கள் என் மனத்திரையில் மழையாக;
குடையே பிடிக்காமல், பிடித்திருக்க நனைகின்றேன்.
ஒரே துணியில் சட்டை, ஒரே நிறத்தில் புத்தக அட்டை,
நிறம் மட்டும் வேறு, பொருளோ ஆளுக்கொன்று உண்டு,
பொம்மை மட்டுமல்ல, பொன்னும்தான் சமபாகம் கொண்டு,

புகை வண்டி நிலையம் மேல் எங்கள் இல்லம்;
புகை வண்டிச்சத்தமும் எங்கள் செல்லம்;
அப்பாவைப் பார்ப்பது வெறுமே சாக்கு
அவரது ஆபீஸ் அறையே எமது தோப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொப்பி, விசில், கொடி, டிக்கட்
அச்சு, மை, தாள், பேனா என்றிவை
பழையன சேர்த்துப் பங்கு பிரிப்போம்
பழகிய இரயில் பெட்டி ஏறி இறங்குவோம்.

பல் விளக்குவதே இரயில் கூவும் சத்தம் கேட்டு
நாள் ஒன்று கடப்பதே இரயில் அட்டவணைப்படி
காலைச்சாப்பாடு எட்டுமணி - கரிவண்டி
மதியச்சாப்பாடு பன்னிரெண்டரை - ஸ்டீம் வண்டி
தேநீர்வேளை பொருள் ஏற்றும் - கூட்ஸ் வண்டி
அப்பா வேலை முடிப்பது ஆறுமணி — ஆள் வண்டி
அனைவரும் உண்பது இரவுநேர — யாழ்தேவி
கண்ணயரும் வேளை கடப்பது — மெயில் வண்டி......

விளையாட்டுத் தோழர் எல்லாம் வேலை நண்பர் பிள்ளைகள்
விளையாட்டு சுற்றிவருவது புகைவண்டி நிலையமதை
நன்றாக நடத்துவோம் இரயில் வண்டிச் சேவை
நாங்களே சமயத்தில் புகைவண்டிக் கோர்வை
நண்பர்களே நடித்திடுவோம் எல்லாவித வேலை......

இப்போதும் இரயில் கண்டால் இனித்திடுமே நெஞ்சம்
நினைவுகளே மிச்சம், எங்கே அந்த இரயிலின் எச்சம்?
சத்தமின்றி சலனமின்றி நின்றிருக்கு ஒரு பக்கம்
சனங்கள் யாருமற்ற வெட்டவெளிக் கட்டடம்
அதுதான் எங்கள் அருமை புகைவண்டி நிலையம்
கேட்டாயா? மகளே உன் தாயின் இளவயது வட்டம்
அம்மாடி..... அது ஒரு அற்புத காலகட்டம்
வருமோ அவை என்றாவது மறுபாட்டம், அந்த
இரயில் சத்தம் கேட்காமலே அறுந்திடுமோ வாழ்க்கைப்பட்டம்

**மகள்**

**இரஞ்சிதமலர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Late Ratnam Navaratnam

It is with deep sorrow and hidden memories I begin to write this brief tribute to the life and work of my beloved Father in-Law late Ratnam Navaratnam who passed away on 29th March 2011 after completing a fruitful life for 92 years. His wife and my Mother- in – Law late Thanapakiyawathi preceded him and bid a farewell to the worldly life in the year 2003.The late couple lived an illustrious and glorious family life for more than 05 decades blessed with 03 daughters.

Lata Ratnam Navaratnam is indeed a retired Railway Officer who hails from a respectable family at Thaliyali, Kokkuvil, Jaffna completed his services as a Station Master in the Dept. of Railway. He was a gentleman par excellence who was an epitome of class and fineness and an ever unassuming personality. I have been made to understand by his colleagues that he was a dedicated public servant who gave his best to the concept of loyalty and integrity. He was always a forthright personality with his dealings and a mantle of coveted family with elegance. He brought up and nurtured his children with discipline, perseverance and dedicated qualities.

They are, Ratnamalar married to Ramakrishnan - Engineer, Ranjithamalar to Ranjith - Accountant and Vasanthamalar to Suntharalingam Administrative officer. I have found him as a courage man with jovial characters who always express positive ideas which exhibited his youngness in his heart irrespective of his age. I would like to say that he accomplished his aspiration and visions by moulding up his children to a stern and effective family bondage.

He is a very pleasing and calm personality and he speaks less and his practical actions and dealings are very high. He dedicated most of leisure time with the family and established a signal of honour to the entire family and relatives.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Living in a world of happiness and peace provides immense pleasure and it is a fascinating experience to the humanity. But this phenomenon fades when all reach the word "death" which is common to all human. Hence, death is the end of the life cycle of a person which we have to accept whether we like it or not. -

After toiling for 92 years in the worldly life both couple have been summoned to receive their heavenly reward. Let us jointly pray to be always as they are alive in our hearts.

**Ramakrishnan.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A TRIBUTE TO MY GRAND PARENTS

*I was very fortunate to have my grandparents care for me during my childhood .Ammah still can remember how my grandparents were overjoyed when I was born, because they were all girls in Ammah's family. When I was a baby, after Ammamah & Ammah had gone to work, thatha looked after me on his own which means he was a full-time mother. He became an expert in changing nappies, preparing my feeds & putting me to sleep. He was able to handle me much better than both the mothers. When I was 11 months old, Ammah went to U.K for higher studies and Appah was working in Colombo so my grand parents were everything to me until I was three years old. Although I was far too young to have much recollection of those times, judging by the stories my parents and the photographs told me it must have been a truly joyous time in my life.Some of the stories are quiet interesting... I was very adornment to go with thatha whenever he went out, so he made a special basket to fit in his bicycle to take me to the shops etc.He taught me a lot of songs & stories together with Ammamah and one of them is his favourite about 'not to fear'.I understand that Ammamah retired from her job to take care of me. I am forever grateful to Thatha and Ammamah for taking care of me.*

*At last I was fortunate to see Thatha again during my trip to Sri Lanka in 2003 when I was nineteen years old.We had long walks in Mannar town talking about a lot of things. I went to Jaffna with him & visited our family houses and lands in Kokuvil which were affected by the political situation...but I enjoyed the fresh air, food, the garden and many more. Above all once again I felt the closeness with thatha and what I remember of him from that period, was that he was a very strong but kind and gentle man.*

*Thatha was not only strong wiled but also strong bodied, I remember even though he was in his eighties he would walk miles through the blistering Sri Lankan heat to purchase his favourite produces from street vendors and constantly asking me what I like so that he could buy for me. I remember giving him one of my VanHeusen*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*shirts which happened to be coloured bright blue, and he wore it through an army checkpoint. When I expressed concern that he might attract too much attention, Thatha simply said, "At this age, what more can they do to me?". To me he was definitely a man's man, and every thing a grandfather should've been. And I will miss him very much.*

***Biranavan***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## My Thatha and Ammamah

*I first saw Thatha and Ammamah when I was 8 years old and visited Sri Lanka for the first time. Since I was very young and spent most of my time playing with the neighbouring children, I wasn't able to form much of relationship with Thatha and Ammamah. Often, when I hear my friends talk of their experiences with their grandparents it makes me regretful that I never got an opportunity to grow up with them playing a major role in my life. I was very lucky to visit them at that time as Ammamah passed away before I got an opportunity to go back.*

*I returned to Sri Lanka in 2007 but was not able to go to Mannar due to the status of the war. Recently, in January 2011, when I returned to Mannar with my parents, I was able to feel a connection towards Thatha. I helped feed him and ensured that he received the correct medication when Periammah and Periappah were away. It was difficult to be sure of whether he recognised me as he wasn't able to speak fluently. Despite this and the fact that he didn't speak much, or at all, I felt a close bond just sitting together in the same room, witnessing what he witnesses day after day.*

*I felt extremely upset when I heard that he had passed away only 6 weeks after my visit because I hoped to visit him again, soon. I am, however, happy that he has had a fulfilling life and he can now rest peacefully throughout eternity.*

***Ranjani***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Memories of my grand parents

*There is no doubt that grandparents are special people in my life. They had treated me like an angel. I was fortunate to spend my childhood days with them. Memories of those days are unforgettable in life.*

## My grandpa

*My grandpa was a retired Station Master. He is an active systematic & knowledgeable person. I spent most of my childhood days at my grandparent's house in Jaffna. My grandpa used to tell many interesting stories when I was small. I can still remember those funny & interesting characters in that stories. He also used to tell about his experiences when he has worked in Srilanka Railways as a Station Master. He is very kind hearted person. He never let my mother to scold me. When I was studying in the primary school he used to come and pick me in his bicycle after the school hours. After the school I used to play at my grandpa's house in his garden where he has planted lot of trees and flowers.*

*In 1995, I came to Colombo due to the war situation in the country. I missed my grandparents. They went to reside with my Periammah at Mannar. During school holidays I used to go to Mannar to see my grandparents, Periammah and Periappa. My grandpa and grandma feel very happy when they see us. My grandpa walked to the nearest shop and buys the favorite food items, chocolate and fruits for us. He always inquires about my studies and always says that I should shine in my studies and make him proud. I am happy that I have made him proud. He is very happy when I progressed well in my studies and he has always encouraged me for my further successes. His words and stories still eco in my ears.*

*The last time I saw grandpa was in 2010 August. That time he was very weak and unable to talk clearly. But he recognized me and told something but I couldn't understand what he said. I felt very upset and it was very difficult and sorrowful to see him in that*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*stage suffering due to his old age. He waived his hands and also asked when we will come again to see him when we left Mannar. That time I didn't think that it was the last goodbye from my beloved grandpa.*

*He was not afraid of death. He is strong and young in mind. He used to tell us how we should conduct his funereal. Even he has written his death notice. He is such a brave wise and confident person I have ever met. I am very much proud about my grandpa. His knowledgeable and interesting talks made me wise and confident to face any challenge and. I am sure the lessons and advices he has thought will guide me throughout my life.*

*We should thank our Malar Periammah for looking after grandpa and grandma with much care and love in there old age. I am missing my grandpa and grandma so much. I am praying the all mighty my grandparent's soul rest in peace and there blessings and memories always be with us.*

***Loving Grand daughter***
***Ruksha.S***

***"On can taste devotion and love of God***
***Only throught his incarnation"***

**- Sri Ramakrishnan -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புப் பேத்தியின் உள்ளத்திலிருந்து..!

சுடர் நிலவு ஒளிவீசி
மழலை தமிழ் பேசி
பூக்கள் வாசம் வீசி
புயல் காற்றும் தென்றலாய வீசி
தாத்தா வீட்டில் யாழ் மண்ணில் - தவழ்ந்த
அந்த நேற்றைய மழலைப் பொழுதுகள்
எங்கோ தொலைந்து போனதே

நிலா பார்த்து தாத்தா சொன்ன
கதைகள் கேட்டு
ஆகாட்ட அடம் பிடித்து
அம்மம்மா தந்த சோறு உண்டு
நாய்க்குட்டியின் வாலைப் பிடித்து ஆட்டி
அது துரத்த ஓடி
தாத்தாவின் சைக்கிளில் ஏறி
யாழ் நகரை வலம் வந்து
Twinkle Twinkle Little Star பாடி
சந்தோச சங்கீதமாய் கடந்த
அந்த சிறு பிள்ளை ஞாபகங்கள்
இன்று வலியுடன் நினைவிலே
மீண்டும் என்று திரும்புமோ
அந்த நாட்கள்

தாத்தா நீங்கள் சொன்ன
Butter & A Little Boy கதை
இன்றும் என் நினைவிலே
உங்களுடன் நீங்கள் உருவாக்கிய
அந்த அழகிய பழமுதிர் சோலை
தோட்டத்தில் நடைபயின்ற நாட்கள்
ஆட்டுக் குட்டியுடனும், நாய்க் குட்டியுடனும்
விளையாடிய நிமிடங்கள்
அம்மா அடித்தாலும் - ஆதரவுடன்
எனை அணைத்து ஆறுதல் தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மம்மாவின் அன்பு
"அச்சமில்லை" "அச்சமில்லை"
அச்சமென்பதில்லையே
உச்சிமீது வான் இடிந்து
வீழ்ந்தபோதிலும் - அச்சம்
என்பதில்லையே என்று அன்று நீங்கள்
Action உடன் சொல்லித் தந்த
பாரதியின் அந்த வரிகள்
நான் அச்சம் கொள்ளும் வேளையிலே
உங்கள் குரலாய் இன்றும் -
உன் காதுகளில் ஒலிக்கிறது தாத்தா !

நகைச் சுவையாய் கதைகள் சொல்லி
என்னை என்றும் சிரிக்க வைக்கும்
தாத்தா - இன்று எனது கண்களைக் குளமாக்கி
பிரிந்து சென்ற தேனோ
மீண்டும் வருவீர்களா தாத்தா
மழலையாய் மீண்டும் உங்கள் மடியில்
செல்லப் பேத்தியாய் அமர்ந்து
கதை கேட்க வேண்டும் நான்

அன்புப் பேத்தி
ருக்ஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் என்றும் நீங்காத SM ஐயா!

மலர்ந்த முகம் கம்பீரமான தோற்றம் நகைச்சுவை ததும்பும் பேச்சு சிறந்த ஆங்கில புலமை மிக்கவர்தான் எமது முன்னாள் கொக்குவில் சனசமூக நிலைய தலைவர் "SM" ஐயா அவர்கள், இவர் சிறந்த கல்வி அறிவுடைய முற்போக்கான குடும்பத்தை சேர்ந்த அயல் கிராமமான தலையாழியை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் பிரம்படியை புகுந்த இடமாக ஏற்றுக்கொண்டார்.

இவர் பல இடங்களில் புகையிரத நிலைய அதிபராக இருந்து ஓய்வு பெற்ற பின் தனது காணியில் புதிய மனை அமைத்து தனது முயற்சியால் சோலையாக்கி வைத்தார். இதனை அவர் தனது " பழமுதிர்ச்சோலை" என்று வினயமாக இரசித்துக் கூறுவார்.

"SM" அவர்கள் தனது குடும்பத்தில் ஒப்பற்ற தலைவனாக இருந்து அவர்களை முன்னேற்றி வைத்தார். இதே போன்று எமது சனசமூக நிலையத்திலும் பல பதவிகளை வகித்து நற்பணிககள் புரிந்தார். ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக தலைவராக இருந்து வழிநடத்தினார். தனக்கு பக்கபலமாக இருக்க ஏனைய உறுப்பினர்களை தேடிச்சென்று பதவிகளை ஏற்குமாறு அறிவுரை கூறுவார். இளைஞர்களுடன் சுமூகமான உறவை பேணினார். அவர்களுடன் சிரித்து பேசி வேலைகளை செய்விக்கும் ஆளுமை கொண்டவர். தான் வேலை செய்த தலங்களில் அக்காலம் இடம் பெற்ற சுவாரசியமான நிகழ்வுகளை நகைச்சுவை உணர்வுடன் சொல்லி சிரிக்க வைப்பார். இதனால் அவரது தலைமைத்துவத்தை எல்லோரும் விரும்பினர். இவர் நிதி விடயங்களில் மிகவும் இறுக்கமானவர். கூட்டங்களில் கணக்கறிக்கையை மிகவும் நுணுக்கமாக பரிசீலனை செய்வார். தான் தொடர்ந்தும் பதவியில் இருக்க விரும்பாமல் இளைஞர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கொள்கையை கொண்டிருந்தார். அந்நேரம் தான் தற்போது "தலைவர்" என அழைக்கப்படும் திரு.செ.செல்வரட்ணம் அவர்கள் வந்து பதவியை ஏற்றார். SM அவர்களைத் தொடர்ந்தும் நாம் போசகராக ஏற்றுக்கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னாளில் 1995 இடப்பெயர்வுடன் சென்ற SM குடும்பத்தினர் தனது மூத்த மகளுடன் மன்னாரிலே தங்கிவிட்டனர்.. பிற்காலம் பிள்ளைகளுடன் இருப்பதே சிறந்தது என முடிவெடுத்தார். SM அவர்கள் ஆயிரம் பிறை கண்டு 92ம் அகவையில் நிறைவாழ்வு வாழ்ந்து காலமாகி விட்டார். அவரது ஆத்மா சாந்தி அடைய எமது சனசமூக நிலையமும் பிரம்படி வாழ் மக்களும் எல்லாம் வல்ல தலையாழி ஞானவைரவர் பெருமான் தாளினை வணங்கி பிரார்த்திக்கின்றோம்.

"நன்றி"

"முதலில் தொண்டனாய் இருக்கக் கற்றுக் கொள்
அதிகாரம் தானே வரும்"

- சுவாமி விவேகானந்தர். -

**தலைவரும் நிர்வாகசபை உறுப்பினர்கள்**
**கொக்குவில் சனசமூக நிலையம் (பிரம்படி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டனத்தடிகளின் புலம்பல்

அத்தமும் வாழ்வு மகத்துமட்டே! விழி யம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மியிரு
கைத்தல மேல் வைத்தழு மைந்தருஞ்சுடு காடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணியப் பாவமுமே!

ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்து பெற்றுக்
பையல்என்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி?

முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாளளவும்
அந்திபக லாச்சிசுவை யாதரித்துத் -தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்?

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோல்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து — முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றி சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுக் தீ மூட்டுவேன்?

நொந்து சுமந்து பெற்று நோவாம லேந்தி முலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே — அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந்தாய் தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன்?

அரிசியோ நானிடுவே னாத்தாள் தனக்கு:
வரிகையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே! அமிர்தமே! செல்வத் திரவியப்பூ
மானே! எனவழைத்த வாய்க்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளி இடுவ தரிசியோ? தாய் தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ? கூசாமல் - மெள்ள
முகமேல் முகம் வைத்து முத்தாடி யென்றன்
மகனே! எனவழைத்த வாய்க்கு?

முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னே யிட்டதீ தென்னி லங்கியில்
அன்னை யிட்டதீ அடிவயிற்றலே
யானு மிட்டதீ மூள்க! மூள்கவே!

வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்ப
லாகுதே பாவியே னையகோ! — காகம்
குருவி பறவாமல் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்ந்தெடுத்த கை!

வெந்தாளோ சோணாகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ? சந்ததமும்
உன்னையே நோக்கி யுகத்து வரங்கிடந்தென்
தன்னையே ஈன்றெடுத்த தாய்!

வீற்றிருந்தா அன்னை: வீதிதனி லிருந்தாள்
நேற்றிந்தாள், இன்று வெந்து நீறானாள் - பாற்றெளிக்க
எல்லாரும் வாருங்கள்! எதென்றி ரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஆத்மா இறைவனடி சேரப் பிரார்த்திப்போம்

அன்னை மடியில்
16 . 05 . 1919

இறைவன் அடியில்
29 . 03 . 2011



அமரர்.
# திரு. இ.நவரெத்தினம்

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
இறைவனடி சேரப் பிரார்த்திக்கின்றோம்.

சிவபதம் பெற அடைய பிரார்த்திக்கும்
சிவபூமி இந்து இளைஞர் மன்றம்.
அறநெறிப் பாடசாலையின் [illegible].
மன்னார் மாவட்டம்.

mannarflash@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கின்றோம்

தோற்றம்
16 • 05 • 1919



மறைவு
29 • 03 • 2011

# திரு. இ. நவரத்தினம்

எங்கள் கல்லூரியின் அபிவிருத்திப் பணிகளில் என்றும் ஒன்றிணைந்து இருப்பவரும், மாணவர்களின் பன்முகவளர்ச்சியில் கரிசனை கொண்டவரும், சமூக நலச்சேவையாளருமாகிய திரு. எஸ். எஸ். இராமகிருஸ்ணன் அவர்களின் அன்பு மாமனார் இயற்கையெய்திய பிரிவுத்துயரில் எமது கல்லூரிச் சமூகமும் பங்கெடுத்துக் கொள்கின்றது.

சிறந்த சமூக, மானுட விழுமியங்களை
தனது வாழ்க்கைப் பண்புகளாகக் கொண்டு
இனிய மனிதராக இவ்வுலகில் வாழ்ந்து சிவபதமடைந்த
அமரர் இரத்தினம் நவரத்தினம் அவர்களின்
ஆத்மா சாந்திகொள்ள எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

சித்திவிநாயகர் இந்துக்கல்லூரிச் சமூகம்,
மன்னார்

மன்னார் பிளாஸ் பிரின்ரர்ஸ்- 023 222 3301



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

எண்ணமும் நினைவுமாகி எம்மை அன்பாலூட்டி
வண்ணமும் கருணை சேர்ந்த வாய்மையும் நிறைந்த தந்தை
நண்ணவும் நோயாலுடலின் நாடியும் தளர்ந்து போக
எண்ணவும் விடி காலை எய்தினார் எளிதில் நீத்தே
அணைத்துமே ஆறுதல் தந்தோர்,
அனைத்திலும் கலந்து நின்றோர்
மலர் வளையங்கள் சாத்தி அஞ்சலித்தோர்
மலர் மாலை சூட்டி மனத்துயர் களைந்தோர்
எரியூட்டுவதற்கு அவர் தம் விருப்பின் படி — மறந்து விடாமல்
நினைவில் கொண்டு பூவரசம் மரத்துண்டெடுத்து வந்து
நிறைவேற்றிய அயலவர்

அஞ்சலிகள் அச்சிட்டு அனுதாபம் செய்தோர்
தூரத்தே இருந்து துயர் பகிர ஓடிவந்தோர்
தொலைபேசி மூலம் ஆறுதல் அளித்தோர்
ஆத்மா சாந்தி வேண்டி அருட்பா இசைத்தோர்
உணவு தனை சமைத்து வந்து உதவிய சுற்றத்தார்
சோராமல் சேர்ந்து நின்று சார்ந்தோரை உபசரித்தோர்
காரியக் கடமை ஈறாய் கலந்ததில் உதவி நின்றோர்
காட்டிய பரிவினோடு நீட்டிய நிறைவுக் கரத்தை
நெஞ்சார நினைவிற் கொண்டோம்
உற்றார் உறவில் உள்ளோர் உறுதுணையாகி நின்றோர்
அந்தி யேஷ்டி கிரியைகளில் பங்கு கொண்டு
ஆத்மா சாந்தி வேண்டியோர்
நினைவு மலரை துரிதகதியில் அச்சிட்டோர்
அனைவருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு.

நன்றியுடன் - குடும்பத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ACKNOWLEDGEMENT

On the 29th March, 2011 when the news spreaded that Late Ratnam Navaratnam departed neighbours, friends and relations rushed to our residence shared their sorrow and conveyed their condolences. Some were at our residence throughout the night participating in the prayers also.

The funeral was attended by close associates, friends and well wishers of the Governmental, Non-governmental and private sectors.

In addition there were contacts by phone messages, telegrams, letters of condolences, sent floral tributes, issued notices of condolences and participated in the procession of carrying the remains to the cemetery for cremation.

It is our solemn duty being the members of the family of the Late Ratnam Navaratnam that we would like to express our profound gratitude to the clergy, nuns, friends, relations and well wishers for their presence & prayers, providing food and helped us in numerous ways during our time of grief.


Once again our sincere thanks to all.

May God Bless you.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விருட்சம் (Family Tree)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்?
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு,
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது,
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது,
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது,
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்.



"இந்தமாற்றம் உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்."
**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org